# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
************

முறையீட்டு மனு எண்: 409 /2016/பேரூராட்சி -3

ஆணை எண்: 104/2017

நாள்: 8/05/2017

திரு. G. லதீஸ்,
முன்னாள் துணைத் தலைவர் (ம) உறுப்பினர்கள்
கீழ்குளம் பேரூராட்சி,
கீழ்குளம், கன்னியாகுமரி மாவட்டம். - **முறையீட்டு மனுதாரர்கள்**

முன்னாள் பேரூராட்சி தலைவர்,
கீழ்குளம் பேரூராட்சி,
கீழ்குளம், கன்னியாகுமரி மாவட்டம். - **எதிர் மனுதாரர்**

கன்னியாகுமரி மாவட்டம், கீழ்குளம் பேரூராட்சி முன்னாள் துணைத் தலைவர் மற்றும் உறுப்பினர்களது 10.01.2012 நாளிட்ட முறையீட்டு மனு பேரூராட்சிகளின் இயக்குநர் கடித ந.க.எண்.9312/2012/இ2, நாள்:6.5.2016 வாயிலாக இம்முறைமன்ற நடுவத்திற்கு பெறப்பட்டு முறையீட்டு மனு எண்.409/2016-ஆக பதிவு செய்யப்பட்டு பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:-

## ஆணை

கீழ்குளம் பேரூராட்சி முன்னாள் துணைத் தலைவர் மற்றும் முன்னாள் மன்ற உறுப்பினர்கள் ஆகியோர்களின் 10.01.2012 நாளிட்ட கையொப்பமிடாத முறையீட்டு மனுவில் கீழ்கண்டவாறு முறையீடு செய்துள்ளார்கள்:–

"கீழ்குளம் பேரூராட்சியில் 4.1.2012ல் ஒரு அஜந்தா கொடுக்கப்பட்டு 6.1.2012அன்று கூட்டம் நடைபெறுவதாக இருந்தது. அந்த அஜந்தாவிலுள்ள வரவு செலவில் ஏராளமான தில்லுமுல்லுகள் இருப்பதை அறிந்த நாங்கள் கேட்ட உடனே இன்று கூட்டம் நடைபெறாது என்று தலைவர் கூறி, ஊழியர்களை வைத்து அவையை பூட்டவும் உத்தரவு போட்டார். நாங்களும் அமைதியாக கலைந்து சென்று பேரூராட்சியின் துணை இயக்குநர் அவர்களிடம் புகார் அளித்தோம். அடுத்து அதே அஜந்தாவை வைத்து கூட்டம் 9.1.2012 அன்று 11 மணிக்கு நடைபெறும் என்று கொடுக்கப்பட்டது. அன்றைய தினம், 11 மணிக்கு நாங்கள் 10 உறுப்பினர்கள் அவைக்குள் நுழைந்ததும், துணை தலைவரிடம் நீங்கள் இந்த சபையில் அமரக்கூடாது. அதற்கு நாங்கள் ஏன் என்று கேட்க, தகாத வார்த்தைகளை பேசி உறுப்பினர்களை அவையைவிட்டு தள்ளிவிட்டு கூட்டம் முடிந்துவிட்டது. அஜந்தா எல்லாம் பாஸாகிவிட்டது என்று எல்லா புக்கையும் எடுத்துச் சென்றுவிட்டார்கள். நாங்கள் உடனடியாக பேரூராட்சிகளின் துணை இயக்குனரை தொடர்பு கொண்டு புகார் செய்தோம். அவர் செயல் அலுவலரிடம் புகார் கொடுக்க கூறியதின் பேரில், செயல் அலுவலரிடம் புகார் கொடுத்தோம். .ஆனால் அவர் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த பேரூராட்சியில் நடக்கும் ஊழலுக்கு ஆதாரமாக 11/2011 மாத செலவில் 06.01.2012 அஜந்தாவும் 09.01.2012 அஜந்தாவையும் பார்க்கும்போது சுமார் 11 லட்சம் முறைகேட்டினை மூடி மறைப்பது உண்மை. ஆகவே பிரச்சனைகளை எவ்வித அச்சமும் இன்றி மன்றத்தில் எடுத்துக் கூறவும், தலைவரின் அராஜக போக்கிற்கும் தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்." என்று கோரியுள்ளார்கள்.

2. மேற்படி முறையீடு குறித்து விளக்கம் அளிக்க முறையீட்டு மனுதாரர் திரு. G. லதீஸ், முன்னாள் துணைத் தலைவர், கீழ்குளம் பேரூராட்சி அவர்களை 11.1.2017 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண்.409/2016, நாள்:2.12.2016ல் ஆணையிடப்பட்டது. ஆனால் முறையீட்டு மனுதாரர் 02.12.2016 அன்று விசாரணைக்கு ஆஜராகவில்லை.

3. 10.01.2012 நாளிட்ட முறையீட்டு மனுதாரர்களின் முறையீடு குறித்து இம்முறைமன்ற 3.12.2016 நாளிட்ட அறிவிப்பாணை எண்.409/2016 வாயிலாக கீழ்குளம் பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை கோரப்பட்டது. அதன்படி, கீழ்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது க.எண்.அ1/168/2016 நாள்:4.1.2017ல் புகார் மனு மீது கன்னியாகுமரி மாவட்டம் கீழ்குளம் பேரூராட்சி மன்ற அஜந்தா புத்தகம், தீர்மான புத்தகம் அனைத்தும் பார்வையிடப்பட்டதாகவும், 09.01.2012ல் நடைபெற்ற மன்றக் கூட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானங்கள் அனைத்திலும், 11/2011 மாத வரவு செலவு உள்ளிட்ட தீர்மானங்கள் அனைத்தையும் பார்வையிட்டதில் எவ்விதமுறைகேடுகளும் நடைபெறவில்லை என்றும், 24.10.2016 அன்றுடன் உள்ளாட்சி அமைப்புகளின் தலைவர்களின் பதவி காலம் முடிவடைந்துள்ளதாலும் தற்போது தனி அலுவலரின் கீழ் பேரூராட்சிகள் இயங்கி வருகிறது என அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

4. முறையீட்டு மனுதாரர் முறையீடு குறித்து 22.2.17 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு கீழ்குளம் செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது. அதன்பேரில் கீழ்குளம் செயல் அலுவலர் 22.2.2017 அன்று நேரில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்ளார்:–

"நான் 1.9.2016 முதல் கீழ்குளம் பேரூராட்சி மன்ற செயல் அலுவலராக பணிபுரிகிறேன். இந்த பேரூராட்சியில் பொறுப்பேற்று கொண்ட பிறகு 2 கூட்டங்கள் நடந்தது. இரண்டு கூட்டங்களிலும் மனுதாரர் சொன்னது போன்று எந்தமுறைகேடும் நடைபெறவில்லை. முறைகேடு என்று அவர் சொன்ன ரூபாய் 11 லட்சமும் 11/2011 வது மாதத்தின் செலவீனத் தொகையாகும்.

அஜந்தாவில் இனம் 291ல் குறிப்பிட்டுள்ள ரூபாய் 11,23,680/-ஐ மீண்டும் தவறுதலாக ரூ.3,76,560/- என மூன்று முறை கணினியில் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது. ஆனால் தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்டப்படி ரூ.11, 23,680/- மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளது. மேலும் அன்றாட வரவு செலவு பதிவேடு பக்கம் 11-ல் செலவு சீட்டு எண்.291-ல் ரூ.11,23,680 மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளது என உறுதி செய்கிறேன். இதில் இரண்டு முறை பணம் பட்டுவாடா செய்யவில்லை. எந்த வகையிலும் முறைகேடு நடைபெறவில்லை. புகார் மனுதாரரால் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து பணிகளும், விதிமுறைகளுக்குட்பட்டு செய்து முடிக்கப்பட்டுள்ளன," எனத் தெரிவித்துள்ளார்.

5. முறையீட்டு மனுதாரர்களின் முறையீட்டு மனு, கீழ்க்குளம் செயல் அலுவலரின் அறிக்கை, விசாரணையின்போது கீழ்க்குளம் பேரூராட்சி செயல் அலுவலர் அளித்த வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு, செயல் அலுவலரின் அறிக்கை ஏற்று கொள்ளப்பட்டு இம்முறையீட்டு மனுவின் மீதான மேல் நடிக்கையினை கைவிடலாமென இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மே திங்கள் 8-ஆம் நாளன்று கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம், சென்னை—600 032

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

**செயலாளர்.** 16.5.17

16.5.17

**பெறுநர்**

1. திரு. G. லதீஸ், முன்னாள் துணைத் தலைவர் (ம) உறுப்பினர்கள்
   கீழ்குளம் பேரூராட்சி,
   கீழ்குளம், கன்னியாகுமரி மாவட்டம்.

2. செயல் அலுவலர்,
   கீழ்குளம் பேரூராட்சி,
   கன்னியாகுமரி மாவட்டம்.